# தலைக்கவச விழிப்புணர்வு பேரணி



மணப்பாறையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பேரணியில் வாகன ஓட்டிகளுக்கு விழிப்புணர்வு பிரசுரங்களை வழங்கிய போலீஸார்.

**மணப்பாறை, ஜூன் 28:** திருச்சி மாவட்டம் மணப்பாறையில் போக்குவரத்து காவல்துறை மற்றும் ஜேசிஐ மணவை கிங்ஸ் அமைப்பின் சார்பில் ஞாயிற்றுக்கிழமை தலைக்கவச விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

கோவில்பட்டி சாலை காமராஜர் சிலை பகுதியிலிருந்து தொடங்கிய பேரணியை மணப்பாறை காவல் ஆய்வாளர் கே.எம். சிவக்குமார், போக்குவரத்து காவல் ஆய்வாளர் சின்னையா, ஜேசிஐ மணவை கிங்ஸ் அமைப்பின் தலைவர் மணிகண்டன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். பேரணியானது கோவில்பட்டி சாலை, கச்சேரி ரோடு, புதுத்தெரு வழியாக பேருந்து நிலையம் கடந்து பெரியார் சிலை திடலில் நிறைவுற்றது. பேரணியில் போலீஸார் மற்றும் ஜேசிஐ மணவை கிங்ஸ் அமைப்பினர் என பலர் பங்கேற்றனர்.

# தமிழக அமைச்சரவையில் முத்தரையர் சமூகத்துக்கு இடம் வழங்க வேண்டும்

## தமிழர் தேசம் கட்சி தீர்மானம்

**திருச்சி, ஜூன் 28:** தமிழக அமைச்சரவையில் முத்தரையர் சமூகத்துக்கு இடம் வழங்கி, சமூக நீதியை தவெக அரசு நிலைநாட்ட வேண்டும் என தமிழர் தேசம் கட்சி வலியுறுத்தியுள்ளது.

திருச்சியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கட்சியின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்டச் செயலர்கள் சந்திப்புக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்துக்கு, கட்சியின் தலைவர் கே.கே. செல்வகுமார் தலைமை வகித்தார். பொதுச் செயலர் தளவாய் ராஜேஷ், தலைமை ஒருங்கிணைப்பாளர் குரு மணிகண்டன், மாநில இணைப் பொதுச் செயலர் கள்ளிக்குடி ராஜேந்திரன், வீரமுத்தரையர் முன்னேற்றச் சங்க மாநிலத் தலைவர் நடராஜன் பூசாரி, திருச்சி மாநகர் மாவட்டச் செயலர் வள்ளல் மணி மற்றும் மாநில, மாவட்ட செயலர்கள் ஆலோசனை நடத்தினர்.

**பின்னர், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:** டெல்டா மாவட்டங்களில் போதிய கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் அறுவடை செய்யப்படும் நெல்மணிகள் மழையில் நனைந்து வீணாகும் அவலம் தொடர்கிறது. விவசாயிகளின் ஓராண்டு உழைப்பு வீணாவதை இந்த அரசு வேடிக்கை பார்க்கக் கூடாது. போர்க்கால அடிப்படையில் நவீன நெல் சேமிப்புக் கிடங்குகளை அமைத்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட வேண்டும். தமிழகத்தில் நாளுக்கு நாள் போதைக் கலாசாரம் அசுர வேகத்தில் பரவுகிறது. குறிப்பாக கஞ்சா உள்ளிட்ட போதை பொருள்கள் இன்று கிராமப்புறங்கள் வரை ஊடுருவி இளைஞர்களின் எதிர்காலத்தையும் ஏழைக் குடும்பங்களையும் முழுமையாகச் சீரழிக்கின்றன.

இந்த சமூகப் பேரழிவைத் தடுக்க தமிழக அரசு போதைப்பொருள் கடத்துபவர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு கடும் தண்டனைகளை வழங்க வேண்டும். தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் மக்கள்தொகையின் பிரதிநிதித்துவ அடிப்படையில் முத்தரையர் சமுதாயத்திற்கு அமைச்சரவையில் முக்கிய பொறுப்புகள் வழங்கப்படுவது மரபாக இருந்தது. ஆனால், தற்போதைய தவெக அரசு அதில் தவறிவிட்டது என்ற வருத்தம் சமுதாய மக்களிடையே நிலவுகிறது. எனவே, தமிழக அமைச்சரவையை மாற்றம் செய்யும்பட்சத்தில் முத்தரையர் சமுதாயத்துக்கு அமைச்சர் பொறுப்பு வழங்கி சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும். கோயிலின் வருமானம் கோயிலுக்கே என்ற உன்னதக் கருத்தை தமிழர் தேசம் கட்சி முழுமையாக வரவேற்கிறது. அதேநேரம் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் உறுதி செய்யப்பட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# மாநகரின் சில பகுதிகளில் நாளை குடிநீர் வராது

**திருச்சி, ஜூன் 28:** திருச்சி மாநகரின் சில பகுதிகளில் வரும் செவ்வாய்க்கிழமை குடிநீர் விநியோகம் இருக்காது.

திருச்சி மாநகராட்சிக்குள்பட்ட டர்பன் நீரேற்று நிலையத்திலிருந்து செல்லும் பிரதான குடிநீர் உந்து குழாய் குடமுருட்டி அருகே ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் புதிதாக பதிக்கப்பட்ட குடிநீர் உந்து குழாயுடன் இணைக்கும் பணி திங்கள்கிழமை நடைபெறுகிறது.

இதனால் மலைக்கோட்டை, சிந்தாமணி ஆகிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு வரும் செவ்வாய்க்கிழமை குடிநீர் விநியோகம் இருக்காது.

வரும் ஜூலை 1 முதல் வழக்கம்போல் குடிநீர் விநியோகம் செய்யப்படும். பொதுமக்கள் இதனால் ஏற்படும் சிரமத்தைப் பொறுத்து மாநகராட்சியுடன் ஒத்துழைக்குமாறு ஆணையர் வீ்ரபிரதாப் சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

# சிக்கத்தம்பூரில் மீன்பிடித் திருவிழா



சிக்கத்தம்பூர் ஏரியில் ஞாயிற்றுக்கிழமை மீன்பிடித்த பொதுமக்கள்.

**துறையூர், ஜூன் 28:** துறையூர் அருகே சிக்கத்தம்பூரில் உள்ள ஏரியில் மீன் பிடித் திருவிழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சுமார் 150 ஏக்கரிலுள்ள இந்த ஏரியில் இருந்த நீர் போதிய மழையின்றி குறைந்தது. இதனால் ஊராட்சி நிர்வாகம் சார்பில் மீன் பிடித் திருவிழா நடந்தது.

இதையடுத்து சிக்கத்தம்பூர் மற்றும் சிக்கத்தம்பூர்பாளையம், ஒக்கரை, மாராடி, ஏரகுடி, பெருமாள்பாளையம், நரசிங்கபுரம், ஒட்டம்பட்டி, முருகூர் ஆகிய கிராமங்களை சேர்ந்த பொது மக்கள் காலையிலிருந்து ஆர்வமுடன் மீன்களைப் பிடித்தனர். அவர்களுக்கு கெண்டை, முள் கெளுத்தி, அயிரை மீன் வகைகள் கிடைத்தன.

# லால்குடி அருகே ஏரியில் மூழ்கி பள்ளி மாணவர் உயிரிழப்பு

**லால்குடி, ஜூன் 28:** திருச்சி மாவட்டம், லால்குடி அருகே ஏரியில் மூழ்கி பள்ளி மாணவர் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.

கோமாகுடி கிராமத்திலுள்ள மாதா கோயில் தெருவைச் சேர்ந்தவர் ஆரோக்கியசாமி மகன் நேசன் (15), லால்குடி காட்டூர் பகுதி ஆர்.சி மீட்பர் உயர்நிலைப் பள்ளியின் பத்தாம் வகுப்பு மாணவர்.

இந்நிலையில் இவர் தன்னுடன் பள்ளியில் பயிலும் ரியாஸ், சந்தோஷ், விஷ்ணு, ஜெயப்பிரகாஷ் உள்ளிட்டோருடன் வெள்ளனூர் அருகேயுள்ள முத்துக்குளத்தின் ஏரியில் குளித்தனர்.

அப்போது ஆழமான பகுதியில் குளித்த நேசன் நீரில் மூழ்கி உயிரிழந்தார். மற்ற மாணவர்களை அப்பகுதி மக்கள் மீட்டனர். தகவலறிந்த லால்குடி போலீஸார் நேசன் உடலை மீட்டு லால்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்து விசாரிக்கின்றனர்.

# என்ஐடி முன்னாள் பேராசிரியருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

**திருச்சி, ஜூன் 28:** தமிழ்நாடு கல்விசார் நூலகர் சங்கத்தின் சார்பில், என்ஐடி முன்னாள் பேராசிரியர் எஸ். ராகவனுக்கு, வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

திருச்சி தேசிய தொழில்நுட்பக் கழகத்தில் புதிய பிரம்மாண்ட நூலகத்தை கட்டமைப்பதில் முக்கியப் பங்காற்றியது, நூலக ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டது, ஓலைச் சுவடி நூலகங்கள் குறித்த ஆராய்ச்சி, நூலகத்தில் காலாவதியான நடைமுறைகளை நீக்கியது மற்றும் நூலக அறிவியல் துறையில் ஆற்றிய பங்களிப்புக்காக இந்த விருது வழங்கப்பட்டது.

பேராசிரியர் எஸ்.ராகவன், மின்னணு மற்றும் தகவல்தொடர்பு பொறியியல் துறையில் 43 ஆண்டுகளாகப் பணியாற்றி, சிறந்த பேராசிரியராகவும், நாட்டின் 5 முக்கிய கல்விசார் நூலகங்களின் மூத்த உறுப்பினராகவும் உள்ளார். நூலக அறிவியல் துறையில் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இதனால் விருதுக்கு அவர் தேர்வாகியது குறிப்பிடத்தக்கது.



திருச்சியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மாநாட்டில் என்ஐடி முன்னாள் பேராசிரியர் எஸ். ராகவனுக்கு விருது வழங்கிய புனித சிலுவைக் கல்லூரி முதல்வர் இசபெல்லா ராஜகுமாரி (இடது), மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் செந்தமிழ்ச் செல்வி. உடன், சங்க நிர்வாகிகள், பேராசிரியர்கள்.

தமிழ்நாடு கல்விசார் நூலகர் சங்கத்தின் சார்பில் திருச்சியில் சனி, ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இரண்டு நாள் மாநாட்டில் இந்த விருது வழங்கப்பட்டது. புனித சிலுவை கல்லூரியில் நடைபெற்ற மாநாட்டில், பேராசிரியர் எஸ். ராகவனுக்கு, வாழ்நாள் சாதனையாளர் விருதை கல்லூரி முதல்வர் இசபெல்லா ராஜகுமாரி வழங்கினார்.

நிகழ்வில், தாவண்கரே பல்கலைக்கழகத் துணைவேந்தர் பி.டி. கும்பர், சென்னைப் பல்கலைக் கழக நூலகத் துறை முன்னாள் தலைவர் பி. ரமேஷ்பாபு, திராவிடப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் துரைசாமி, பாரதிதாசன் பல்கலைக் கழகத் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் பி.ஜெயப்பிரகாஷ், தலைமை நூலகர் எஸ். சீனிவாச ராகவன், சங்கத் தலைவர் ஆர். சர்வகுமார், மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் செந்தமிழ்ச் செல்வி ஆகியோர் பங்கேற்று விருதாளருக்கு பாராட்டு தெரிவித்தனர்.

மாநாட்டில், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நூலகர்கள், ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்று சமூகப் பயன்பாடு சார்ந்த 68 ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்து பேசினர்.

# உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட யாரும் எங்களை நிர்பந்திக்கவில்லை



**திருச்சி, ஜூன் 28:** உதயசூரியன் சின்னத்தில் நிற்க யாரும் எங்களை நிர்பந்திக்கவில்லை என மனிதநேய ஜனநாயகக் கட்சித் தலைவரும், சிதம்பரம் தொகுதி எம்எல்ஏவுமான தமிமுன் அன்சாரி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் திருச்சியில் ஞாயிற்றுக்கிழமை மேலும் கூறியதாவது: நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் தொடர்ந்து சர்ச்சைக்குரிய வகையில் தீர்ப்புகளை வழங்குவதால், அவர் ஜாதி, மதம் தொடர்பான வழக்குகளை விசாரிக்க சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அனுமதியளிக்கக் கூடாது.

மதிப்பெண் வழங்கக்கூடிய அளவுக்கு தவெக அரசு பணிகளைத் தொடங்கவில்லை. தவெக ஆட்சிக்கு வந்த 45 நாள்களில் பாலியல் குற்ற வழக்குகள், கொலைகள் அதிகரித்து சட்டம்-ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. மின்வெட்டு அதிகரித்துள்ள நிலையில், வெள்ளை அறிக்கை வெளியீடு என்பது மக்களிடமிருந்து தங்களை தற்காலிகமாக தற்காத்துக் கொள்ளும் நடவடிக்கையே.

பயிர்க் கடன் தள்ளுபடி விவகாரத்தில் விவசாயிகள் அதிருப்தியில் உள்ளனர். தேர்தலில் வாக்குறுதியளித்தபடி, விவசாயிகளின் அனைத்துக் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும்.

எங்களது கட்சிக்கு தனிச்சின்னம் கிடைக்காததால் உதயசூரியன் சின்னத்தில் நின்றோம். எங்களை யாரும் நிர்பந்திக்கவில்லை.

தேர்தலில் அதிமுக பின்னடைவைச் சந்தித்தவுடன் இனி எதிர்காலம் இல்லை எனக் கருதி அதிமுகவினர் பலரும் தவெகவில் சேர பனையூர் பங்களா வாயிலில் காத்திருக்கின்றனர். இது நல்லதல்ல.

திமுக - பாஜக கூட்டணி என்ற கருத்து திமுகவை தனிமைப்படுத்த தில்லி அரசியல் சூழ்ச்சியால் திட்டமிட்டு பரப்பப்படுகிறது.

இது வதந்திதான், உண்மையில்லை. பள்ளி மாணவர்களுக்கு ஜாதி அடையாள அட்டை வழங்குவோம் என செங்கோட்டையன் கூறியிருப்பது, அதிர்ச்சியாக உள்ளது. இது மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தும். இதை வன்மையாகக் கண்டிக்கிறோம். இதை உடனடியாகத் திரும்பப் பெறுவது நாட்டுக்கும், எதிர்காலத் தலைமுறைக்கும் நல்லது.

தமிழக அரசியலில் திமுக - அதிமுக கட்சிகளின் சமநிலை அவசியம் என்பதால், திமுகவும், அதிமுகவும் பலமாக இருக்க வேண்டுமென்பதே எங்களது கருத்து என்றார் தமிமுன் அன்சாரி.

**Change of Name**

I, S.MAHESWARAN (SELVARAJ MAHESWARAN), S/o. SELVARAJ, was Born on 23-04-1986 (Birth Place: Karuppampalayam, Karur District), residing at No. 142/1, Venus Nagar, 2nd Cross, Ponnagar, Rayanoor, PVC Company, Thanthonimalai, Karur District - 639 005, Tamil Nadu, Shall henceforth be known as **S. MAHESHWARAN (SELVARAJ MAHESHWARAN).**

S.MAHESWARAN (SELVARAJ MAHESWARAN)
Karur, 26.06.2026.

**Change of Name**

I, NIJAMUDEEN ABDUL GAFFOOR born on 13.07.1963 (Native District: THANJAVUR DISTRICT) residing at No.77/39, Raja Veethi, Swamimalai, Kumbakonam Taluk-612 302, Thanjavur District, Tamil Nadu shall henceforth be known as **ABDUL GAFFUR SHEIK DAWOOD**.

NIJAMUDEEN ABDUL GAFFOOR
Swamimalai, 27.06.2026.

MANAPPURAM FINANCE LTD.
CIN: L65910KL1992PLC006623,
Registered Office: W - 4/ 638A, Manappuram House,
P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

**தங்க நகைகள் பொது ஏலம்**

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கீழ்க்கண்ட கிளைகளில் 16.07.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும். வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

ஜெயங்கொண்டசோழபுரம், 012370700049843, கரூர், அரவக்குறிச்சி கரூர், 0127090700035816, 5879, 0127090730018330, கரூர் திருச்சி ரோடு, 0122160700034616, 4626, 4647, கிருஷ்ணராயபுரம், 0129350750000229, பள்ளப்பட்டி கரூர், 0125090700044426, தாந்தோணிமலை கரூர், 0120060730034023, நாகப்பட்டினம், மயிலாடுதுரே, 0136200700012677, வேதாரண்யம், நாகப்பட்டிணம், 0123390730029184, பெரம்பலூர், பஜார் வீதி ஜெயங்கொண்டசோழபுரம், 0102650700798953, பெரம்பலூர், 0116560730017894, 8026, வெங்கடேசபுரம் பெரம்பலூர், 0122310730013271, துக்கோட்டை, ஆலம்குடி , 0128240700045589, அரந்தாங்கி, 0126500730036035, அரிமளம் புதுக்கோட்டை, 0132080700022105, 2106, 2129, 0132080730010339, கரம்பபைக்குடி புதுக்கோட்டை, 0127790700061124, 1181, 1186, வடக்கு மெயின் ரோடு புதுக்கோட்டை, 0126640730024441, தஞ்சாவூர், ஐயம்பேட்டை தஞ்சாவூர், 0132130700066930, காவேரி நகர், தஞ்சாவூர், 0116310700048524, நாகேஸ்வரம் தெற்கு வீதி கும்பகோணம், 0129770730008640, திருப்பணந்தல் , 0121670700050392, திருவையாறு, 0101890730015070, திருவாரூர், நிடமங்கலம், 0101870700757536, 7539, கூஜகீக்இஏஜகீஅககஅ௸ஜ, ஈ வி ஆர் ரோடு திருச்சி, 0108980700055439, திருச்சி, கே கே நகர், திருச்சி, 0122470730012147, 2228, காட்டுப்புத்தூர், 0126360700051319, மணச்சநல்லூர் திருச்சி, 0120720700063700, 0120720730018908, பொன்மலை, 0113600700044406, சுப்ரமணியபுரம் திருச்சி, 0103120700081094, தாத்தையங்கார்பேட்டை, 0125050700043747, துறையூர், 0111610700049250, 0111610730012630, உப்பிலியாபுரம் திருச்சி, 0121130730018771, 8889,

மேற்கண்ட ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டும்: ஆர்வமுள்ள ஏலதாரர்கள், ஏலம் நடைபெறும் அதே நாளில், ரூ. 10,000/- தொகையை ஈஎம்டி ஆக (வெற்றி பெறாத ஏலதாரர்களுக்குத் திருப்பித் தரப்படும்) என்இஎஃப்டி/ஆர்டிஜிஎஸ் மூலம் செலுத்த வேண்டும். ஏலத்தில் பங்கேற்பவர்கள் செல்லுபடியாகும் அடையாள அட்டை/பான் கார்டை வைத்திருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 09072607147 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக

# ஆவணங்களின்றி வைத்திருந்த ரூ. 16 லட்சம் பறிமுதல்

## மூவரிடம் விசாரணை

**திருச்சி, ஜூன் 28:** திருச்சி எடமலைப் பட்டிபுதூரில் ஆவணங்களின்றி வைத்திருந்த ரூ. 16 லட்சத்தை ஞாயிற்றுக்கிழமை பறிமுதல் செய்த போலீஸார், மூவரிடம் விசாரிக்கின்றனர்.

திருச்சி எடமலைப்பட்டிபுதூர் போலீஸார் இரட்டைமலை ஒண்டி கருப்பு கோயிலுக்குச் செல்லும் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ரோந்தில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கிருந்த மறைவிடத்தில் சந்தேகப்படும்படி மது அருந்திக் கொண்டிருந்த மூவரைப் பிடித்து நடத்திய சோதனையில் அவர்களிடம் உரிய ஆவணங்களின்றி கட்டு கட்டாக ரூ. 16 லட்சம் இருந்தது தெரியவந்தது.

இதையடுத்து அப் பணத்தை பறிமுதல் செய்த போலீஸார், அவர்களை காவல் நிலையம் அழைத்துச் சென்று நடத்திய விசாரணையில் அவர்கள், திருச்சி பொன்னகரைச் சேர்ந்த மாடசாமி (43), கார்த்திகேயன் (38), புதுக்கோட்டையை சேர்ந்த முருகேசன் (45) என்பதும், வெளிநாட்டு பயண முகவர்களான இவர்கள் வைத்திருந்த பணத்துக்கு முறையான ஆவணங்கள் இல்லாததும் தெரியவந்தது.

இதையடுத்து 3 மூவரையும், மேல் விசாரணைக்காக எடமலைப்பட்டி புதூர் போலீஸார் வருமான வரித் துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

பிடிபட்டவர்கள் டிக்கெட் முன்பதிவு செய்த பணத்தை விமான நிறுவனங்களுக்கு கட்ட கொண்டு சென்றதாகத் தெரிவித்தனர்.

இருப்பினும், உரிய ஆவணங்கள் இல்லாததால், ஹவாலா பணமாக இருக்குமோ என்ற சந்தேகத்தின்பேரில் போலீஸாரும், வருமான வரித்துறையினரும் விசாரிக்கின்றனர்.

# மாட்டுவண்டி, குதிரை வண்டி எல்கைப் பந்தயம்

**பேராவூரணி, ஜூன் 28:** பேராவூரணி அருகே மாட்டு வண்டி, குதிரை வண்டி எல்கைப் பந்தயம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு முதல்வர் ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு, தஞ்சைதெற்குமாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் மத்திய ஒன்றியம் சார்பில் இரண்டாம் ஆண்டு மாட்டுவண்டி மற்றும் குதிரை வண்டி எல்கைப் பந்தயம் பூக்கொல்லை கடைவீதியில் நடைபெற்றது.

இதில், பெரிய மாடு, கரிச்சான் மாடு, பூஞ்சிட்டு மாடு, ஒற்றை மாடு மற்றும் நடுக்குதிரை என ஐந்து பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் தஞ்சாவூர், புதுக்கோட்டை, காரைக்குடி, சிவகங்கை, தொட்டியம், முசிறி மற்றும் ராமநாதபுரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 105 மாட்டுவண்டிகளும், 20-க்கும் மேற்பட்ட குதிரை வண்டிகளும் பங்கேற்றன.



பேராவூரணி அருகே சேதுபாவாசத்திரத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மாட்டுவண்டிப் போட்டியில் எல்கையை நோக்கி ஓடும் மாடுகள்.

போட்டியில் வெற்றி பெற்ற உரிமையாளர்களுக்கு மொத்தம் ரூ.3.5 லட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

சிறப்புப் பரிசுகளாக எல்.இ.டி டிவி, மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் உள்ளிட்ட வீட்டு உபயோகப் பொருள்கள் மற்றும் சுழற்கோப்பைகள் வழங்கப்பட்டன.

முதலிடம் பெற்ற மாட்டுவண்டி உரிமையாளருக்கு ரூ. 40,000 மதிப்பிலான வெள்ளித் தார்க்கம்பு பரிசாக வழங்கப்பட்டது. பந்தயத்தை சாலையின் இருபுறமும் ஆயிரக்கணக்கா பொதுமக்கள் திரண்டு வந்து ஆர்வத்துடன் கண்டு ரசித்தனர்.

முன்னதாக தவெக தஞ்சை தெற்கு மாவட்ட செயலர் ஏனாதி சி.மதன் பந்தயத்தை தொடங்கி வைத்தார். பேராவூரணி நகரச்செயலர் டெல்டா இராஜ விக்னேஷ் உள்ளிட்ட தவெக நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். ஏற்பாடுகளைச் சேதுபாவாசத்திரம் மத்திய ஒன்றிய செயலர் ஆர்.அருள் முருகன் செய்திருந்தார்.

# ஓட்டம்பட்டியில் மர்மப் பொருள் வெடித்து ஒருவர் காயம்

**துறையூர், ஜூன் 28:** திருச்சி மாவட்டம், துறையூர் அருகே கீழே கிடந்த மர்ம பொருள் ஞாயிற்றுக்கிழமை வெடித்து ஒருவர் காயமடைந்தார்.

ஒட்டம்பட்டியைச் சேர்ந்தவர் ராமன் மகன் செந்தில்குமார், அரசுப் பேருந்து ஓட்டுநர். சனிக்கிழமை மாலை இவர் ஒட்டம்பட்டி மலையடிவாரப் பகுதிக்குச் சென்றார்.

அப்போது அந்தப் பகுதியில் உருண்டையாக கிடந்த மர்மப் பொருளை எடுத்து தட்டிப் பார்த்தபோது, திடீரென வெடித்ததில் அவருடைய கை விரல்கள் சேதமாயின.

இதையடுத்து துறையூர் தனியார் மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். உப்பிலியபுரம் போலீஸார் விசாரிக்கின்றனர்.

# ஒன்பது வயது சிறுவன் கொலை: பிளஸ் 2 மாணவர் கைது



திருமேனிநாதன்

**ஆலங்குடி, ஜூன் 28:** புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகே 4-ஆம் வகுப்பு மாணவரை ஓரினச் சேர்க்கை துன்புறுத்தலுக்கு உள்ளாக்கி கொலை செய்த பிளஸ் 2 மாணவரை போலீஸார் ஞாயிற்றுக்கிழமை போக்ஸோ சட்டத்தில் கைது செய்தனர்.

ஆலங்குடி அருகேயுள்ள கருக்காக் குறிச்சி ஊராட்சிக்குள்பட்ட திருமுருகபட்டினத்தைச் சேர்ந்த பாலாஜி மகன் திருமேனிநாதன் (9). இவர், குரும்பிவயல் அரசு நடுநிலைப் பள்ளியில் 4-ஆம் வகுப்பு படித்து வந்தார். இந்நிலையில், இவர் சனிக்கிழமை மாலை அப்பகுதியில் சிறுவர்களோடு விளையாட சென்றாராம்.

இரவு வரை வீடு திரும்பாததால், உறவினர்கள் தேடியபோது, அப்பகுதியில் உள்ள குளத்தின் கரையோரம் இருந்த செடிகள் அடர்ந்த புதருக்குள் சிறுவன் ரத்த காயங்களுடன் உயிரிழந்து கிடந்தது தெரியவந்தது. இதுகுறித்து தகவலறிந்து அங்கு சென்ற ஆலங்குடி காவல் துணைக் கண்காணிப்பாளர் மனோகரன், வடகாடு போலீஸார் ஆகியோர் சிறுவனின் உடலை மீட்டு கூறாய்வுக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்து விசாரித்தனர்.

மேலும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பொறுப்பு வகிக்கும் திருச்சி மாநகர காவல் துணை ஆணையர் மணிகண்டன் சம்பவ இடத்துக்கு சனிக்கிழமை நள்ளிரவு சென்று விசாரணை மேற்கொண்டார்.

வடகாடு போலீஸார் மேற்கொண்ட விசாரணையில், அதே பகுதியைச் சேர்ந்த 12-ஆம் வகுப்பு படிக்கும் மாணவர், திருமேனிநாதனை தனியாக அழைத்துச் சென்று ஓரினச்சேர்க்கை துன்புறுத்தலுக்கு உள்ளாக்கி, அவரை கொலை செய்தது தெரியவந்தது.

தொடர்ந்து, 17 வயது சிறுவனை போக்ஸோ சட்டத்தில் போலீஸார் ஞாயிற்றுக்கிழமை கைது செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# மினிவேன் மோதியதில் இளைஞர் உயிரிழப்பு

**கந்தர்வகோட்டை, ஜூன் 28:** கந்தர்வகோட்டையில் சனிக்கிழமை இரவு மோட்டார் சைக்கிள் மீது மினி வேன் மோதியதில் இளைஞர் உயிரிழந்தார்.

கந்தர்வகோட்டை ஒன்றியம், வீரடிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மணி மகன் மலைச்சாமி (22) (படம்). இவர் கந்தர்வகோட்டை அருகில் உள்ள விராலிப்பட்டியில் உள்ள தனது மனைவி குழந்தையை பார்ப்பதற்காக தனது மோட்டார் சைக்கிளில் சனிக்கிழமை இரவு செங்கிப்பட்டி- கந்தர்வகோட்டை சாலையில் வாண்டையன்பட்டி பிரிவு சாலை அருகே சென்று கொண்டிருந்தார். அப்போது, திருக்காட்டுப்பள்ளியில் இருந்து ஆலங்குடிக்கு வாழை இலை ஏற்றிச்சென்ற மினிவேன் எதிர்பாராத விதமாக மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் தூக்கி வீசப்பட்டு மலைச்சாமி பலத்த காயம் அடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

தகவலறிந்த கந்தர்வகோட்டை போலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மலைச்சாமி உடலை கைப்பற்றி உடற்கூறாய்விற்கு புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்து, விபத்து குறித்து வழக்கு பதிந்து விசாரணை செய்து வருகின்றனர்.

## இன்றைய நிகழ்ச்சிகள்

*சீதாலட்சுமி ராமசுவாமி கல்லூரி:* வைர விழா கொண்டாட்டம், வான் நோக்குதல் நிகழ்ச்சி, விண்வெளி பயணம் என்ற தலைப்பில் உரை - பேராசிரியர் பி. ரமேஷ், கல்லூரி வளாகம், பிற்பகல் 2 .